


# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்

மின்னிதழ்

அக்டோபர் 2025






## செயலர் பக்கம்


அருள்பணி. சு. மரிய சூசை






### அன்பு உறவுகளே!

இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த காலம் அது. கி.பி. 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் நாள் காலை 8.45 மணிக்கு சக்தி வாய்ந்த அணுகுண்டு ஜப்பான் நாட்டு ஹிரோகூஷிமா நகர்மீது வீசப்பட்டது. நகரமே தரைமட்டமானது. பல இலட்சம் மக்கள் மடிந்து மண்ணோடு மண்ணாயினர். ஆனால் நகரின் மையத்தில் அமைந்திருந்த புனித விண்ணேற்பு அன்னையின் ஆலயமும் அதனுள் இருந்தவர்களும் மட்டும் பாதுகாப்பாக இருந்தனர். இவ்வாறு பாதுகாப்பாக இருப்பதற்கு காரணமாக, அவர்கள் எல்லாரும் சொன்னது என்ன தெரியுமா? "நாங்கள் செபமாலை செபித்துக்கொண்டிருந்தோம்." "செபமாலை வாய்ச் செபமும் தியானச் செபமும் கொண்ட ஓர் உன்னத உரையாடல். இந்தச் செபமே திரு அவையை செழுமையாகவும் தூய்மையாகவும் வைத்திருக்கிறது" என்கிறார் திருத்தந்தை 6 ஆம் பால். "செபமாலை சமுதாயத்தைப் பாதிக்கும் தீமைகளுக்கு எதிரான ஆற்றல் மிக்க ஆன்மிக ஆயுதமாகும்" என்கிறார் திருத்தந்தை 13 ஆம் யோவான். "செபமாலையை தக்க விதமாக செபிக்கிறவன் ஒருபோதும் சேதம் ஆக மாட்டான். இதை நான் என் இரத்தத்தில் எழுதித்தர தயாராக இருக்கிறேன்" என்கிறார் புனித லூயி மான்போர்ட். இவ்வளவு மேன்மையும் வல்லமையும் உடைய செபமாலையைக் கொண்டாடும் மாதமே இந்த அக்டோபர் மாதம்.

இறைவனின் அன்னைக்கு நாம் தரும் பெருமையெல்லாம் இறைவனுக்கே மாட்சி தருகிறது என்பதை உணர்ந்தவர்களாக, புனித செபமாலை அன்னைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ள இம்மாதத்தில், தினமும் பக்திப் பற்றுதலுடன் செபமாலை செபிப்போம்! சிறப்பாய் வாழ்வோம்!

## புனித கதவு - சிறைச்சாலையில் ஏன்?

பகுதி - 1

#17

கத்தோலிக்கத் திரு அவையில், ஒரு சிறைச்சாலையில் 'புனித கதவு' திறப்பது என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க **முதல்** நிகழ்வாகும்.

பொதுவாக சமூகத்தால் மறக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட சிறைக்கைதிகள் நம்பிக்கையினால் மனமாறினால், கடவுளுடைய அருளும் மீட்பும் நிச்சயமாக கிடைக்கும் என்பதை அனைவருக்கும் சுட்டிக்காட்டும் ஒரு வெளிப்படையான அடையாளம் ஆகும்.



கடவுளின் அருகாமையை சிறைக்கைதிகள் உணர, நம்முடைய முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ், தாமே சிறையில் புனித கதவை திறந்து வைத்தார்.



எவ்வளவு பெரிய குற்றம் செய்திருந்தாலும் அவர்களிடமும் மனித நேயமும் மனம் மாறுவதற்கான வாய்ப்பும் இருப்பதாக நம் திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்தினார்.

இதனால் நாம் அனைவரும் சிறைச்சாலையைத் தண்டனைக்குரிய இடமாகப் பாராமல், மனமாற்றம் மற்றும் புதுவாழ்விற்கான மையமாக அதனைப் பார்க்க அழைப்பு விடுத்தார்.

## புனித கதவு #18

## சிறைச்சாலையில் ஏன்? - பகுதி - 2

சிறைக் கைதிகளிடமும் மனித நேயத்தை காண்கின்ற படியினாலும், கிறிஸ்துவ நம்பிக்கைக்கு முரணானதும், மன்னிப்புக்கும், மறுவாழ்வுக்குமான நம்பிக்கையை, வேரறுப்பதுமான மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனையை அகற்ற வலியுறுத்தினார். ஆயுள் தண்டனை என்பது மறைவான மரண தண்டனை என்று குறிப்பிடுகிறார்.

சிறைச்சாலை நெரிசல், தனி மனிதனின் அடிப்படை மனிதத் தேவைகள் மற்றும் கண்ணியத்தை மறுக்கும் மனிதாபிமானமற்ற நிலைமைகள், கைதிகளிடையே பாகுபாடு போன்ற சமூக பிரச்சனைகளை முன் வைத்து பேசினார்.

குற்றங்களின் சமூக-பொருளாதார வேர்களை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். குற்றம் என்பது வெறுமனே தனிப்பட்ட தேர்வுகளின் விளைவு மட்டும் அல்ல மாறாக வறுமை, வாய்ப்பின்மை மற்றும் பாகுபாடு உள்ளிட்ட பல்வேறு சமூக மற்றும் பொருளாதார காரணிகளாலும் அமைகிறது.

ஒதுக்கப்பட்ட குழுக்கள், குறிப்பாக வறுமை மற்றும் சமூக பொருளாதார பின்தங்கிய நிலைகளை அனுபவிப்பவர்களுக்கு முறையான நீதி கிடைப்பதில்லை.

ஆகவே சிறைச்சாலையின் செயல்பாடுகள் தண்டனைக்குரிய இடமாக இல்லாமல் மறுமலர்ச்சியை மட்டும் மையமாக கொண்டு இயங்க வேண்டும். நம்பிக்கையின்மையால் வாழ்வில் விரக்தியுடன் சமூகத்திலிருந்து விலகி நிற்கும் அவர்கள் மறுபடியும் சட்டத்திற்கு கீழ்படிந்து சமூகத்தோடு ஒன்றிணைய பல்வேறு முயற்சிகளை அரசுகள் எடுக்க வேண்டும்.

இதனை செயலாக்க பல்வேறு கட்ட சமூக சேவை நிகழ்வுகளில் கைதிகளை பங்கேற்க வைப்பதின் மூலம் அவர்களை சமூகத்தோடு ஒன்றிணைய வைப்பதற்கு வத்திக்கானும் (Holy See) இத்தாலிய அரசு நீதிதுறையும் ஓர் ஒப்பந்தம் செய்தது.

# புனித கதவு #19

## சிறைச்சாலையில் ஏன்? - பகுதி - 3



நம் முன்னாள் திருத்தந்தை பிரான்சிசுக்கு சிறைக் கைதிகள் மேல் அன்பும் பரிவும் கொள்வது, இது ஒன்றும் முதல் முறை அல்ல. திருத்தூதுப்பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் வெளிநாட்டிலுள்ள சிறைச்சாலைகளை அவர் சந்திப்பார்.

திருத்தந்தையாக பொறுப்பேற்ற நாள் முதல், ஒவ்வொரு வருடமும் புனித வியாழன் அன்று சிறைச்சாலையை சந்திப்பதை அவர் வழக்கப்படுத்தினார்.

எ.கா.



2018ல் - ரெஜினா கோலி சிறைச்சாலை


2024ல்-ரெபிபா சிறைச்சாலை-பெண்கள் பிரிவு


2023ல்-காசல் டெல் மார்மோ - சிறார் சிறைச்சாலை

இந்த வருடமும் அவர் உடல்நிலை சரியில்லாத போதிலும், புனித வியாழன் அன்று, அதாவது இறப்பதற்கு நான்கு நாள் முன்னால் உரோமை ரெஜினா கோலி சிறைச்சாலைக்கு சென்று அங்கு இறைவேண்டல் செய்து தம் உடனிருப்பையும் காட்டினார்.

அவருடைய இந்த அணுகுமுறை நமது கத்தோலிக்க சமூகப் படிப்பினைகளான இரக்கம், மீட்பு மற்றும் மிக முக்கியமாக அனைவரும் கடவுளின் பிள்ளைகள் என்று பார்க்கும் மனப்பாங்கு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டது.

கடவுளின் அளவற்ற, முடிவற்ற அன்பை அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதனை வலியுறுத்தவே, சிறைச்சாலையில் புனித கதவைத் திறந்து, திருப்பலி நிறைவேற்றினார்.



**கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு**

**திருவிவிலியம் - திருமறைக்கல்வி - திருவழிபாடு**

**திருச்சி மறைமாவட்டம்**

# புனித கதவு #20

## சிறைச்சாலையில் ஏன்? - பகுதி - 4

ரெபிபா சிறைச்சாலையில், 26/12/2024 அன்று புனித கதவை திறந்துவைத்து, திருத்தந்தை பிரான்சிஸ் பின் வருமாறு மறையுரை ஆற்றினார்:

எதிர்நோக்கு என்பது கயிறுகளால் இறுக்கி கட்டப்பட்டிருக்கும் கரையிலிருக்கும் ஓர் நங்கூரத்தை போன்றது. சில சமயங்களில் கயிறு மிகக் கடினமாக இருந்து நமது கைகளைக் காயப்படுத்தலாம். ஆனாலும் எதிர்நோக்கின் நங்கூரம், நாம் சோர்ந்து விடாமல் முன்னோக்கிச் செல்வதற்கு உதவி செய்கிறது.

நமது கைகளால் செய்ய வேண்டிய இரு காரியங்களை மறவாதீர்கள்.
1.எதிர்நோக்கைக் கைவிட்டு விடாதீர்கள்
2.எப்பொழுதும் திறந்த மனதுடன் இருங்கள்

'புனித கதவு' நமது உள்ளக் கதவை குறிக்கும் ஓர் அடையாளம். புனித கதவைத் திறப்பது போல் நமது உள்ளக் கதவைத் திறக்க வேண்டும். நமது இதயக் கதவை மூடிவிட்டால் அது பரிவும் இரக்கமும் இல்லாமல், கல்லைப் போன்று கடினமாகிவிடும். எல்லாச் சூழ்நிலையிலும் நமது இதயக் கதவைத் திறந்து வைத்து மனம் தளராமல் எதிர்நோக்குடன் வாழ்க்கையை அணுக வேண்டும்.

எல்லாம் முடிந்தது என்று நம்பிக்கையை மட்டும் இழந்து விடாதீர்கள். "மானிடமகன் எச்சூழலிலும் மன்னிக்கத் தயாராக இருக்கிறார்" என்றார்.

வெறும் பேச்சிற்காக அல்ல, மாறாக உண்மையாகவே தாம் அவர்களுக்காக இறைவனிடம் செபித்துக் கொள்வதாகவும் அவர்களும் தனக்காக செபித்துக் கொள்ளவும் கேட்டுக்கொண்டார்.

**கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு**
**திருவிவிலியம் - திருமறைக்கல்வி - திருவழிபாடு**
**திருச்சி மறைமாவட்டம்**

## புனித கதவு #21

## சிறைச்சாலையில் ஏன்? - பகுதி - 5

பெண் சிறைக்கைதிகளால் செய்யப்பட்ட தோற்பைகளை, திருத்தந்தையின் அதிகாரப்பூர்வமான உரிமம் பெற்ற நினைவுப் பொருட்களில் ஒன்றாக சேர்த்துக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.



Archbishop Fisichella presents the Jubilee tote bags initiative

யூபிலியை முன்னிட்டு, வத்திக்கான் எடுத்த முயற்சிகளால், அமெரிக்காவின் அப்போதைய ஜனாதிபதி , ஜோ பைடன் "பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடு(SST)" என்ற பெயரை கியூபாவிற்கு ரத்து செய்வதாக அறிவித்தார். அதனை தொடர்ந்து கியூபா அரசும், 553 சிறைக்கைதிகளை விடுதலை செய்வதாக அறிவித்தது. அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கியூபாவை திரும்பி SST என்ற பட்டியலில் கொண்டு வந்திருந்தாலும் அனைத்து (553) கைதிகளையும் கியூபா விடுதலை செய்தது குறிப்பிடத்தக்கது. வத்திகானின் இந்த செயல் பாராட்டுதற்குரியது.


File photo of the release in Cuba of some detainees imprisoned for their participation in July 2021 anti-government protests (AFP or licensors)

நமது திரு அவையில் இவ்வாண்டு முழுவதும் பல்வேறு பிரிவுகளுக்கு யூபிலி கொண்டாட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. அதில் சிறைக்கைதிகளுக்கு, 14/12/2025 அன்று யூபிலியாக கொண்டாட திருஅவை திட்டமிட்டுள்ளது.

## இரக்கத்தின் தூதர்கள் நடத்திய ஒப்புரவு அருளடையாளப் பயிற்சிப் பாசறை

ஆகஸ்டு 26 ஆம் தேதி மதுரை PILLAR இல், உரோமையிலுள்ள நற்செய்தி அறிவிப்புக்கான திருப்பேராயம், உலகில் நற்செய்தி அறிவிக்கும் ஆணையத்தின் பிரிவு, இந்தியாவிலுள்ள பாப்பிறை மறைப்பணிக் கழகங்கள், மதுரை உயர் மறைமாவட்ட இரக்கத்தின் தூதர்கள் ஆகியோர் இணைந்து, யூபிலி 2025 –ஐ முன்னிட்டு நடத்திய 'ஒப்புரவு அருளடையாளமும் இரக்கத் திருப்பணியும்' என்கிற கருத்தமர்வு நடைபெற்றது.

இந்நிகழ்வுக்குத் தலைமையேற்ற மதுரை உயர்மறைமாவட்ட பேராயர் மேதகு. அந்தோனிச்சாமி அவர்கள், 'ஒவ்வோர் அருள்பணியாளரும் இறைவனின் இரக்கத்தின் அடையாளங்களாகத் தங்கள் பணித்தளங்களில் திகழவேண்டும்' என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில், மருத்துவர் திருமிகு. அந்தோனி மனுவேல் விஜய் அவர்கள் ஒப்புரவு அருளடையாளம் தருகிற ஆன்மிக நலம், மனநலம் குறித்து கருத்துரை வழங்கினார். அருள்முனைவர். யேசு கருணாநிதி, அருள்முனைவர். ஜோகப் மிக்கேல் செல்வராஜ், அருள்முனைவர். அம்புரோஸ் ஆகியோர் ஒப்புரவு அருளடையாளத்திற்கான மேய்ப்புப் பணி சவால்கள், வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினர். மதுரை, பாளையங்கோட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, கோட்டாறு, குழித்துறை, வேலூர், சேலம் ஆகிய மறைமாவட்டங்களிலிருந்து 60 அருள்பணியாளர்கள் பங்கேற்ற இப்பயிற்சிப் பாசறையில், நம் திருச்சி மறைமாவட்டத்திலிருந்து நம் மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளரின் தலைமையில் 13 அருள்பணியாளர்கள் பங்கேற்றனர்.





## தன்னார்வ வேதியர்கள் கொண்டாடிய திருவிவிலியத் திருவிழா

21.09.2025, ஞாயிறு அன்று மதியம் 1.00 மணி முதல் 6.00 மணிவரை திருச்சி நல்லாயன் நிலையத்தில் தன்னார்வ வேதியர்கள் கொண்டாடிய திருவிவிலியத் திருவிழா நடைபெற்றது. இவ்விழாவில் பங்கேற்ற தன்னார்வ வேதியர்கள் 7 அணிகளாகப் பிரிக்கப்பட்டனர். பிற்பகல் 1.30 மணியிலிருந்து 2.30 மணிவரை ”எதிர்நோக்கின் அடித்தளம் திருவிவிலியம்” என்னும் தலைப்பில் விவிலிய அரியணையேற்றப் போட்டி நடைபெற்றது. அழகிய, அர்த்தமுள்ள, அலங்கார வேலைப்பாடுகளோடு திருவிவிலியத்தை அரியணையேற்றி மகிழ்ந்தனர்.

தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு விவிலிய அடிப்படையில் அமைந்த பஜன் போட்டி நடைபெற்றது. இப்போட்டிகளின் மதிப்பீட்டாளர்களாக அருள்சகோதரி லூர்ட்ஸ் ம.ஊ.ச. அவர்களும், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி. சேவியர் சற்குணம் அவர்களும் செயல்பட்டனர். போட்டிகள் முடிந்தபின் பிற்பகல் 3.15 மணிக்கு, இவ்விழாவில் கலந்துகொண்ட அனைத்து தன்னார்வ வேதியர்களும், இறைமக்களும் இணைந்து புனித மரியன்னை பேராலயத்தின் முன்பு, குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.



பேராலயத்திலிருந்து அனைவரும் தங்கள் கைகளில் திருவிவிலியத்தையும், இறைவார்த்தைகள் எழுதப்பட்ட பதாகைகளையும் உயர்த்திப் பிடித்தபடி, இறைவார்த்தையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பாடல்கள் பாடிக்கொண்டே, நல்லாயன் நிலையத்திற்குப் பவனியாக வந்தனர். பவனியின் இறுதியில் திருவிவிலியம் பல்லக்கில் வைத்து ஆடம்பரமாக எடுத்துவரப்பட்டது. தொடர்ந்து நல்லாயன் நிலையத்தில் நடைபெற்ற இறைவார்த்தை வழிபாட்டில் இறைவார்த்தைக்கு தீப, தூப, மலர்களால் அஞ்சலி செய்யப்பட்டு, தொடக்க செபம் மன்றாடப்பட்டது. பின் இறைவார்த்தையை மையப்படுத்திய பாடல்கள், மன்னிப்பு மன்றாட்டுகள், இறைவார்த்தை முழக்கம், இறைவார்த்தைப் பகிர்வுகள், நம்பிக்கையாளர் மன்றாட்டுகள், விவிலியக் காணிக்கை, ஆகியவை இடம் பெற்றன. இவை அனைத்தையும் தன்னார்வ வேதியர்களே தயாரித்து நெறிப்படுத்தினர்.



பின்பு பங்கேற்பாளர்கள் அனைவரது திருவிவிலியமும் செயலர் அருள்பணி. மரியசூசை அவர்களால் செபித்து, அர்ச்சிக்கப்பட்டது. மாலை 4.30 மணிக்கு அனைவருக்கும் தேநீரும் சிற்றுண்டியும் வழங்கப்பட்டன. மாலை 4.50 மணிக்குப் புனித பவுல் குருத்துவக் கல்லூரியின் அதிபர் அருள்பணி. டைனிசியஸ் லாரன்ஸ் அவர்கள் விவிலியத்தில் யூபிலி பற்றியும், விவிலிய வாசிப்பு முறைகள் பற்றியும் சிறப்புரை ஆற்றினார். பின்பு மாலை 5.40 மணிக்கு கடந்த மாதம் தன்னார்வ வேதியர்களுக்கு நடைபெற்ற யூபிலிக் கலைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும், இவ்விழாவில் நடைபெற்ற திருவிவிலிய அரியணை ஏற்றப் போட்டி, விவிலியப் பஜன் பாடல் போட்டிகளுக்கான பரிசுகளும் செயலரால் வழங்கப்பட்டன. முதல் மூன்று பரிசுகள் மட்டுமல்லாமல், போட்டிகளில் கலந்துகொண்ட அனைவருக்குமே பரிசுகள் வழங்கப்பட்டன. விவிலியத்தின்மீது ஆர்வம் கொண்டு, இறைவார்த்தையை வாசிக்கவும் வாழவும் அனைவருக்கும் இந்த திருவிவிலியத் திருவிழா உறுதுணையாக அமைந்திருந்தது.











திருவிவிலியத் திருவிழா
21-09-2025




# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்

















## தன்னார்வ வேதியர்களின் களப்பணி - தேவராயநேரி

நம் மறைமாவட்டத்தின் அய்யம்பட்டி பங்கின் கிளைப் பங்கான தேவராயநேரியில் தன்னார்வ வேதியர்கள் 10 நபர்கள் இணைந்து பங்குத்தந்தை அருள்பணி. லெனின் ஆரோக்கியராஜ், பணிக்குழுச் செயலர் அருள்பணி. மரியசூசை ஆகியோரின் ஆலோசனையிலும் வழிகாட்டுதலிலும் 07.06.2025 முதல் 28.09.2025 வரை ஞாயிறுதோறும் மாலை வேளையில் களப்பணி செய்தனர்.

ஒவ்வொரு ஞாயிறும் 4 முதல் 5 தன்னார்வ வேதியர்கள் தேவராயநேரிக்குச் சென்று மறைக்கல்விப் பாடல்கள், விளையாட்டுகள், பொம்மலாட்டம் ஆகியவை வழியாக மாணவர்களை ஈர்த்து, அடிப்படை இறைவேண்டல்கள், திருப்பலி இறைவேண்டல்கள், அடிப்படை கத்தோலிக்க மறைக்கல்வி, திருப்பலி ஆகியவை பற்றி விளக்கிக்கூறி மறைக்கல்வி வகுப்புகள் எடுத்தனர். இந்த கிறிஸ்தவ நம்பிக்கை உருவாக்கப் பயிற்சியில் பெரியவர்களும்கூட ஆர்வத்தோடு பங்கெடுத்தனர்.

28.09.2025 ஞாயிறு அன்று, விவிலிய ஞாயிறு கொண்டாடப்பட்டது. அன்று மாலை மறைக்கல்வி மாணாக்கருக்கு மாறுவேடப் போட்டி, லூக்கா நற்செய்தியிலிருந்து தேர்வு, பாட்டு போட்டி ஆகியவை நடத்தி பரிசுகள் வழங்கி இக்களப்பணியை இனிதே நிறைவு செய்தனர். தொடர்ந்து 17 வாரங்கள் இக்களப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைத்த தன்னார்வ வேதியர்கள் ஒவ்வொருவருக்கும் பணிக்குழுச் செயலரின் அன்பான வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். இதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் நல்கிய பங்குப் பணியாளர் அருள்பணி. லெனின் ஆரோக்கியராஜ் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள் பல.





## மலம்பட்டி பங்கில் பீடச் சிறார்களுக்கான பயிற்சிப் பாசறை

30.09.2025 செவ்வாய் அன்று, காலை 9:30 மணிமுதல் 1:30 மணிவரை மலம்பட்டி பங்கு புனித சவேரியார் திருத்தலத்தில் பீடச் சிறார்களுக்கான பயிற்சிப் பாசறை நடைபெற்றது. பங்குப் பணியாளரின் வழிகாட்டலில் திருச்சி மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு இப்பயிற்சிப் பாசறையை வழிநடத்தியது. காலை 9.30 மணிக்கு மறைக்கல்வி பாடல்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. 10.00 மணிக்கு பணிக்குழுச் செயலர் அருள்பணி. சு. மரியசூசை அவர்கள் பீடச் சிறாரின் அழைத்தல், பண்புகள், பணிகள், வாழ்வியல் குறித்து கருத்துரை வழங்கினார். பின் நடைபெற்ற திழுவழிபாடு தொடர்பான மறைக்கல்வி விளையாட்டுகளில் மாணாக்கர் ஆர்வமுடன் பங்கெடுத்து மகிழ்ந்தனர்.

இடைவேளைக்குப் பிறகு பீடச் சிறார் அனைவரும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, பீடப் பணி செய்வது குறித்து குழுக்களில் தன்னார்வ வேதியர்கள் திருமிகு. ஜானி, திருமிகு. லிசியோ ஆக்னஸ், திருமிகு. ஜோஸ்பின் ஆஞ்சலா, ஆகியோரால் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் இறுதியில் பங்குப் பணியாளர் அருள்பணி. அந்தோணி ரமேசு முன்னிலையில் பீடச்சிறார் உறுதிமொழி எடுக்கும் சடங்கு நடைபெற்றது. அதில் பங்கேற்ற அனைவருக்கும் யூபிலி கொண்டாட்ட நினைவாக பீடப் பணி செய்கையில் அணிவதற்காக திருச்சிலுவை அணிவிக்கப்பட்டது. நிறைவாக அனைவருக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டது. இப்பயிற்சிப் பாசறைக்காக மிகவே திட்டமிட்டு, அனைத்து கிளைப்பங்குகளையும் ஒருங்கிணைத்து ஏற்பாடுகள் செய்த மலம்பட்டி பங்குப் பணியாளர் அருள்பணி. அந்தோணி ரமேசு அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள் பல.



# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்

















## ஞாயிறு மறைக்கல்வி சந்திப்புகள்

21.09.2025 அன்று எடமலைப்பட்டிப் புதூர், 28.09.2025 அன்று பெரிய மிளகுபாறை ஆகிய பங்குகள் பணிக்குழுச் செயலரால் சந்திக்கப்பட்டன. அன்றைய ஞாயிறு திருப்பலியைச் செயலர் அவர்கள் நிறைவேற்றி, ஞாயிறு மறைக்கல்வியின் முக்கியத்துவம் குறித்து இறைமக்களுக்கு மறையுரை ஆற்றினார். திருப்பலிக்குப் பின்பு செயலர் மறைக்கல்வி மாணாக்கரையும் ஆசிரியர்களையும் சந்தித்து அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தினார்.



# இரண்ட படங்களுக்கு இடையே உள்ள 6 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து மகிழுங்கள்





